பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**31 03 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** செமி கண்டக்டர் உற்பத்தித்துறையில் இந்தியா முன்னோடி நாடாக உருவெடுத்து வருகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** பீகார் மாநிலம் நாலந்தா மாவட்டத்தில் உள்ள மகர ஷீத்லாஷ்மி கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி **8** பெண்கள் உயிரிழந்தனர்.

**3.** தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளராக திரு Chanchal Kumar நியமிக்கப்பட்டுள்ளார்.

**4.** தேர்தல் அறிக்கைகளை வெளியிடுவதற்கு மூன்று நாட்களுக்குமுன் தலைமை தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், பஞ்சாப் இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>

செமி கண்டக்டர் உற்பத்தித்துறையில் இந்தியா முன்னோடி நாடாக உருவெடுத்து வருகிறது பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

குஜராத் மாநிலம் **Sanand**-ல் செமி கண்டக்டர் தொழிற்சாலையை திறந்துவைத்து பேசிய பிரதமர், **2021**-ஆம் ஆண்டு செமி கண்டக்டர் இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து இதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக தெரிவித்தார்.

இந்த இயக்கத்தின்கீழ், ஒரு லட்சத்து **60** ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நாடு முழுவதும் ஆறு மாநிலங்களில் பத்து செமி கண்டக்டர் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள செமி கண்டக்டர் இரண்டாவது இயக்கப்பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்றும், செமி கண்டக்டர் கருவிகளை உருவாக்குவதற்கான அனைத்து பாகங்களையும் உள்நாட்டிலேயே தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

செமி கண்டெக்டர் தொழிலுக்கான வலுவான கட்டமைப்பை உருவாக்குவதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த செமி கண்டக்டர் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் **Chip-**கள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<<>>>>>>>

மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு புதிய செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகவல் ஒலிபரப்புத்துறை செயலாளராக பீகார் மாநிலத்தை சேர்ந்த ஐ ஏ எஸ் அதிகாரி திரு சன்சல் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதுள்ள தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு **Sanjay Jaju** வடகிழக்கு மாநிலங்கள் மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலாத்துறை செயலராக திரு புவ்னேஷ்குமாரும், சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை செயலராக திரு ஸ்ரீவத்சா கிருஷ்ணாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊரக மேம்பாட்டுத்துறை செயலராக திரு ரோஹித் கன்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

பீகார் மாநிலம் நாலந்தா மாவட்டத்தில் உள்ள மகர ஷீத்லாஷ்டமி கோவிலில் இன்று காலை ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 8 பெண்கள் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அப்பகுதியில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற வேண்டும் என்றும் பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள செய்தியில், இந்த சம்பவம் மிகுந்த வேதனை அளிப்பதாகவும், காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற பிரார்த்தனை செய்வதாகவும் கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்ததுடன்,

காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற பிரார்த்திப்பதாகவும் கூறியுள்ளார்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் பிரதமர் அறிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

நாடு முழுவதும் குழாய்வழி சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் இரண்டாம்கட்ட இயக்கப்பணிகளை வரும் ஜூன் மாதம் 30-ஆம் தேதிவரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

வீட்டு உபயோக சமையல் எரிவாயு வாடிக்கையாளர்களுக்கு குழாய்வழி இணைப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்றும் அரசு அறிவுறுத்தியுள்ளது.

பெட்ரோலிய அமைச்சகம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மார்ச் மாதத்தில் மூன்று லட்சத்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீட்டு உபயோக பயனாளிகள், மாணவர் விடுதிகள், உணவகங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு சமையல் எரிவாயு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரண்டு லட்சத்து 70 ஆயிரம் இணைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் அதன் வழியாக எரிவாயு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாளும் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மார்ச் மாதத்தில் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்கள் மூன்று லட்சத்து 20 ஆயிரம் பேர் ஐந்து கிலோ சமையல் எரிவாயுவை மார்ச் 23-ஆம் தேதிவரை வாங்கி பயன்படுத்தியுள்ளதாகவும் பெட்ரோலிய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நாட்டில் போதிய அளவு பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் குழாய்வழி விநியோகத்திற்கான சமையல் எரிவாயு போதிய அளவில் இருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பெட்ரோலியப் பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாக எழுப்பப்படும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மாநில அரசுகளும், யூனியன் பிரதேச அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, ஊடகங்களுக்கு சரியான தகவலை அவ்வப்போது அளிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு கோரியுள்ளது.

<<<<<<<>>>>>>

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பில் வெளியிடப்படும் தேர்தல் அறிக்கைகள் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளுக்கு உட்பட்டு தேர்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், அதனை வெளியிடுவதற்கு மூன்று நாட்களுக்குமுன் தலைமை தேர்தல் அதிகாரியிடம் மூன்று நகல்களாக சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்து உறுதிமொழிகளும், திட்டங்களும் தேர்தல் நடத்தை நெறிமுறைகளுக்கு உட்பட்டவை என உறுதி செய்து, கட்சியின் சார்பில் சான்று அளிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கைகள் வெளிப்படைத் தன்மையுடனும், நம்பகத் தன்மையுடனும் இருக்க வேண்டும் என்றும், திட்டங்கள் மற்றும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நிதி ஆதாரங்களை உறுதி

செய்ய வேண்டிய பொறுப்பும் கட்சிகளுக்கு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைமுறைக்கு சாத்தியமான வாக்குறுதிகள் மட்டுமே அளிக்கப்பட வேண்டும் என்றும், வழிகாட்டு நெறிமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை வெளியிட்டபின் செய்தியாளர்களிடம் பேசிய புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவஹர், வாக்குப்பதிவுக்கு இரண்டு நாட்கள் உள்ள நிலையில் எந்த தேர்தல் வாக்குறுதியும் அறிவிக்கப்படக் கூடாது என்றும் தெரிவித்தார்.

அனைத்து அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் தேர்தல் நடத்தை நெறிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்றும் திரு ஜவஹர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>>

நாட்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டப்பணி நாளை தொடங்க உள்ளது.

நாளை முதல் மக்கள் தங்களது சுய விவரங்களை ஆன் லைன் மூலமாக பதிவிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த மக்கள் தொகை கணக்கெடுப்பு தலைமை பதிவாளர் மற்றும் கணக்கெடுப்பு ஆணையர் திரு மிருத்யூன்ஜை குமார் நாராயண், ஆன்லைனில் சுய விவரங்களை பதிவிடுவதில் உள்ள பயன்களை எடுத்துரைத்தார்.

இந்த கணக்கெடுப்பில் இடம்பெயர்ந்தவர்கள் குறித்த விவரங்களை எவ்வாறு பதிவு செய்வது என்பது குறித்தும் விளக்கினார்.

தமிழகத்தில் ஆகஸ்ட் மாதம் முதல் தேதி மக்கள் தொகை கணக்கெடுப்புப்பணி தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

மத்திய அரசு பணியாளர்களுக்கு நாளை மறுநாள் முதல் கர்மயோகி பாரத் இணையவழி பயிற்சி தொடங்க உள்ளது.

இந்த திட்டம் குறித்து எமது செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த மத்திய பணியாளர் மற்றும் பயிற்சித் துறையின் அதிகாரி டாக்டர் அல்கா மிட்டல், **2020**-ஆம் ஆண்டு முதல் கர்மயோகி பாரத் திட்டம் தொடங்கப்பட்டு பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும், இதன்மூலம் அவர்களின் செயல் திறன் மேம்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

**iGOT** கர்மயோகி இணையதளத்தின் மூலம் பல்வேறு அரிய தகவல்களை பணியாளர்கள் பெற்று வருவதாகவும், அதில் பங்கேற்பதன்மூலம் அவர்களின் செயல்திறன் பன்மடங்கு உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பணியாளர்கள், விதிமுறைகளின்படி மட்டும் செயல்பட்டு வந்ததாகவும், தற்போது பல்வேறு திறமைகளை பெற்றுள்ளதால் தேவைக்கேற்ப முடிவெடுக்கும் திறனை பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

சாதனா சப்தா எனப்படும் ஒருவார கால பயிற்சித் திட்டம் ஊழியர்களின் பணிக் கலாச்சாரத்தை மேம்படுத்தும் என்றும் டாக்டர் அல்கா மிட்டல் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தா காவல்துறை சிறப்புப்பிரிவு துணை ஆணையர் திரு **Shantanu Sinha Biswas**-ஐ அடுத்த மாதம் **6**-ஆம் தேதி நேரில் ஆஜராகுமாறு, அமலாக்க இயக்குனரகம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை, நிலக்கரி ஊழல் போன்றவற்றில் திரு **Shantanu Sinha Biswas**-க்கு தொடர்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில், பஞ்சாப் - குஜராத் அணியை எதிர்கொள்கிறது

நியூசண்டிகரில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில், டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.

------------

ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் **Priya Ghanghas** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மங்கோலியாவின் **Ulaanbaatar**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் **60** கிலோ எடைப்பிரிவில், கஜகஸ்தானின் **Rimma Volossenko**-வை வென்றார்.

**<<<<<<<END>>>>>>**